கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின், மார்ச் 12 அன்று தமது இல்லத்தில் தலைமையேற்று நடத்தி வைக்கிறார்!

சென்னை தெற்கு மாவட்ட அவைத் தலைவர் - சைதை எஸ்.குணசேகரன் இல்லத் திருமணம்!

மணவிழா வரவேற்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துகிறார்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை! அமைச்சர்கள் - முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 9-

சென்னை தெற்கு மாவட்டக் கழக அவைத் தலைவரும், கழக முன்னோடியுமான சைதை எஸ்.குணசேகரன் இல்லத் திருமணத்தை மார்ச் 12 அன்று - கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

மார்ச் 14 அன்று - அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெறும் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு வாழ்த்துகிறார்.

இம்மணவிழா பற்றிய விவரம் வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் சைதை எஸ்.குணசேகரன் - கு.கலைமணி ஆகியோரின் புதல்வி கு.அனுஷியாவுக்கும் - புதுக்கோட்டை மாவட்டம் - கந்தர்வக்கோட்டை - நம்புரான்பட்டி, வீ.ரெங்கசாமி -ரெ.சித்ரா ஆகியோரின் புதல்வர் ரெ. தினேஷ்பாபு ஆகியோரின் திருமணம்,

12.3.2025 - புதன்கிழமை காலை 9.00 மணியளவில் சென்னை - சித்தரஞ்சன் சாலையில் உள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இல்லத்தில் நடைபெறுகிறது.

திருமணத்தை, கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்திவைத்து, மணமக்களை வாழ்த்துகிறார்.

திருமணத்தைத் தொடர்ந்து - திருமண வரவேற்பு விழா, 14.3.2025- வெள்ளிக்கிழமை மாலை 6 மணி அளவில், சைதாப்பேட்டை - சின்னமலை - புனித தோமையார் சமூக நலக்கூடத்தில் நடைபெறுகிறது.

திருமண வரவேற்பு விழாவில் - சைதை கிழக்குப் பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ், மேற்குப் பகுதிச் செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் வரவேற்கின்றனர்.

மணவிழா வரவேற்பு நிகழ்ச்சிக்கு - சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் தலைமை வகிக்கிறார்.

அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், பி.கே.சேகர்பாபு, ஒன்றிய முன்னாள் அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., மேயர் பிரியா ராஜன், முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., காரப்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ., ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ., துணை மேயர் மு.மகேஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மண விழா வரவேற்பில் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்குகிறார்.

மேலும் கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., தலைமைக் கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் முனைவர் க.பொன்முடி, கனிமொழி கருணாநிதி எம்.பி., ஆ.இராசா எம்.பி., அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, எஸ்.ரகுபதி, சு.முத்துசாமி, கே.ஆர்.பெரியகருப்பன், மு.பெ.சாமிநாதன், அர.சக்கரபாணி, எஸ்.எஸ்.சிவசங்கர், சா.மு.நாசர், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கோவி.செழியன், சி.வி.கணேசன், சேலம் ராஜேந்திரன், டி.ஆர்.பி.ராஜா, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, அறிவாலயம் பத்மநாபன், தலைமை நிலையச் செயலாளர்கள் பூச்சி முருகன், துறைமுகம் காஜா மற்றும் அறிவாலயம் தனபால் - மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், நிர்வாகிகள் கலந்துகொண்டு வாழ்த்துகிறார்கள்.

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மார்ச் 12 ஆம் தேதி திருவள்ளூரில் "தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும்" ஒன்றிய அரசுக்கு எதிரான கண்டனப் பொதுக்கூட்டத்தில் கண்டன உரையாற்ற வருகை தர உள்ளார். இந்நிலையில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் முன்னிலையில் கழக அமைப்பு துணை செயலாளர் அன்பகம் கலை இடத்தினை தேர்வு செய்து அதனை பார்வையிட்டார் அருகில் மாவட்ட கழகச் செயலாளர்கள் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளனர்.